# மனனப் பகுதி - தரம் 5

## திருவிவிலியப் பகுதி

1. ஆண்டவர் இரக்கமும் அருளும் கொண்டவர், நீடிய பொறுமையும் பேரன்பும் உள்ளவர்.(தி.ப.103:8)
2. மேற்கினின்று கிழக்கு எத்துணைத் தொலைவிலுள்ளதோ, அத்துணைத் தொலைவிற்கு நம் குற்றங்களை நம்மிடமிருந்து அவர் அகற்றுகின்றார். (தி.ப.103:12)
3. உடைந்த உள்ளத்தார்க்கு அருகில் ஆண்டவர் இருக்கின்றார், நைந்த நெஞ்சத்தாரை அவர் காப்பாற்றுகின்றார். (தி.ப.34:18)
4. என் தீவினை முற்றிலும் நீங்கும்படி என்னைக் கழுவியருளும், என் பாவம் அற்றுப்போகும்படி என்னைத் தூய்மைப்படுத்தியருளும். (தி.ப.51:2)
5. கடவுளுக்கேற்ற பலி நொறுங்கிய நெஞ்சமே கடவுளே! நொறுங்கிய, குற்றமுணர்ந்த உளத்தை நீர் அவமதிப்பதில்லை. (தி.ப.51:17)
6. ஈசோப்பினால் என்னைக் கழுவியருளும், நான் தூய்மையாவேன். என்னைக் கழுவியருளும் உறை பனியிலும் வெண்மையாவேன். (தி.ப.51:7)
7. கடவுளே! தூயதோர் உள்ளத்தை என்னுள்ளே படைத்தருளும் உறுதிதரும் ஆவியை, புதுப்பிக்கும் ஆவியை, என்னுள்ளே உருவாக்கியருளும். (தி.ப.51:10)
8. இதோ! நீர் விரும்புவது உள்ளத்து உண்மையையே, மெய்ஞானத்தால் என் மனத்தை நிரப்பும். (தி.ப.51:6)

## திருத்தூதர் நம்பிக்கை அறிக்கை

9. பாவ மன்னிப்பை நம்புகிறேன். பகுதி – (10)
10. நிலைவாழ்வை நம்புகிறேன். பகுதி – (12)